**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**

**NAGAPATTINAM.**

**C.C.1/2018** P.W. 4

Deposition of witness for Prosecution:

| | | | |
|---|---|---|---|
| Name | :திருமதி சந்திரா | Father's Name . | |
| Village | : | Taluk : | |
| Caste | : | Calling : | |
| Religion | : | Age | : |
| Date | : 17.09.2021 | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 0 17.09.2021.

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் நாகப்பட்டினம் கோட்டவாசல்படி தெருவில் குடியிருந்து வருகிறேன். வேளாங்கண்ணி மாதாகோவில் துப்பறவு பணியாளராக வேலைப்பார்த்து வருகிறேன். எனக்கு காலை 6 மணி முதல் 10 மணி வரையும் மாலை 3 மணி முதல் 6 மணிவரை வேலை நேரம் ஆகும். அசா.1 ஐ தெரியும். எதிரிகள் இருவரையும் தெரியும். 2016 2 வது மாதம் தேதி ஞாபகம் இல்லை பகல் 1 மணியளவில் நான் பாத்துரூமில் வேலைப்பார்த்து கொண்டிருந்தேன் அப்போது ஆஜர் எதிரியும் ( இன்று 1 வது எதிரி மட்டும் ஆஜர் ) அவரது கணவர் என்று நினைக்கிறேன் அவரும் ஆஜர் எதிரியும் சுமார் 25 வயது மதிக்கதக்க சுகன்யா என்பவர் அவரது கை குழந்தையுடன் அங்கிருந்தார். சுகன்யா பாத்ரூம் போவதற்காக குழந்தையை எதிரியிடம் கொடுத்துவிட்டு உள்ளே போனார். அது 9 மாத குழந்தை ஆகும். சுகன்யா பாத்ரூம் போகபோனதால் நான் என்னுடைய பாத்ரூம் கழுவும் வேலை பார்க்க போனேன் சுமார் 1/4 மணிநேரம் கழித்து நான் வெளியே வந்தபோது சுகன்யா அவர் கொடுத்துவிட்டு சென்ற குழந்தையை காணவில்லை என்று அழுதுகொண்டிருந்தார். நான் என்ன என்று கேட்டபோது எதிரியிடம்கொடுத்துவிட்டு சென்ற குழந்தையையும் அவர்களையும் காணவில்லை பார்த்தீர்களா என்று கேட்டார்கள் அதற்கு நான் நீங்கள் குழந்தையை கொடுத்தபோது பார்த்தேன் தூக்கிகொண்டுபோனபோது பார்க்கவில்லை என்று சொன்னேன்.

அப்போது நானும் கட்டண கழிப்பிடத்தில் காசு வாங்குபவரும் கொஞ்ச நேரம் அந்த



இடத்தில் தேடிப்பார்த்தோம். 1/2 மணி நேரம் வரைக்கும் தேடிப்பார்த்தோம். அப்புறம் அவர்கள் கிடைக்காததால் நான் சுத்தம் செய்யும் பணியை செய்ய சென்றுவிட்டேன். காசு வாங்குபவரும் சென்றுவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள் அப்போது எதிரிகளிடம் குழந்தையை கொடுத்ததை பார்த்தேன் என்றும் ரொம்ப நேரம் குழந்தையை வைத்திருந்ததையும் கையில் கொண்டுபோனதையும் பார்த்தேன் என்று சொன்னேன். சிபிசிஐடி அலுவலகத்தில் இருந்து குழந்தை கிடைத்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். என்னையும் கட்டண கழிப்பிடத்தில் காசு வாங்குபவரையும் வர சொன்னார்கள் நாங்கள் இருவரும் போனோம். அப்போது ஆஜர் எதிரிகளை நாங்கள் பார்த்த நபர்கள்தான என்று கேட்டார்கள் ஆமாம் நாங்கள் இவர்களைதான் பார்த்தோம் என்று அடையாளம் காட்டினோம். காவல் நிலையத்தில் எதிரிகள் இருவரும் தான் இருந்தார்கள். போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள்தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்த சமயத்தில் பழைய வேளாங்கன்னி மாதா குளம் அருகில் கழிப்பறையில் வேலைப்பார்த்துகொண்டிருந்ததேன். 2015ம் வருடத்தில் இருந் கடந்த 6 வருடமாக வேலைப்பார்த்து வருகிறேன். நிரந்தர பணியாளராக வேலைப்பார்த்து வருகிறேன். அடையாள அட்டை எதுவும் எனக்கு கொடுக்கப்படவில்லை. பேரால ஊழியராக இருந்தால் அடையாளஅட்டை அனைவருக்கும் கொடுக்கப்படும் என்றால் எங்களுக்கு மட்டும் கொடுக்கப்படுவதில்லை. நான் பேராலய ஊழியராவே வேலைப்பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் வேலைப்பார்க்கும் இடத்திற்கு பக்கதில் வடக்குபுறம் கோவில், மேற்குபுறம் கேட், கேட்டை தாண்டி கடைகள், கிழக்கு பக்கம் ஐஸ்கிரீம் பார்லர், சொரூப கடைகள், கழிப்பறை கிழக்கு மேற்காக இருக்கிறது. கழிப்பறை தெற்கு பக்கமாக இருக்கிறது என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தாக கூறப்படும் அன்று கோவிலுக்கு சாமிகும்பிட வநதவர்கள் டூரிஸ் பயணிகள், திருப்பயணிகள் இருந்தார்கள் என்றால் சரிதான். கூட்டம் அன்றையதினம் அவ்வளவாக இல்லை. ஆஜர் எதிரிகள் காசு வாங்கும் இடத்திற்கு எதித்தார்போல் உட்கார்ந்திருந்தார்கள். எந்த திசையில்

உட்கார்ந்திருந்தார்கள் என்று என்னால் சொல்லமுடியாது. சுகன்யா என்பவருடைய பெயரையும் அவருடைய வயதையும் நான் எப்படி தெரிந்து கொண்டேன் என்றால்



பாத்ரும் போகும்போது என்னிடம் அவருடைய விபரங்களை சொல்லிவிட்டு போனார். சுகன்யா என்னிடம் சொல்லிவிட்டு போன பெயர் விபரங்களை சுகன்யா என்னிடம் சொன்னார் என்று போரிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். சுகன்யா எதிரிகளிடம் யாரிடம் குழந்தையை கொடுத்துவிட்டு போனார் என்று போலிசாரிடம் நான் குறிப்பிட்டு சொல்ல வில்லை. யாரிடம் சுகன்யா குழந்தையை கொடுத்துவிட்டு போனார் என்றால் ஆஜர்எதிரியிடம்தான் கொடுத்துவிட்டு போனார். ஆஜர் எதிரியிடம் சுகன்யா குழந்தையைகொடுத்ததை நான் நேரில் பார்திருந்தால் அதை போலிசாரிடம் குறிப்பிட்டு சொல்லியிருப்பேன்என்றும் அதை பார்க்காததால் தான் போலிசாரிடம் குறிப்பிட்டு சொல்லிவில்லை என்றால் சரியல்ல. போலிசாரிடம் எதிரிகளிடம்தான் குழந்தையை கொடுத்துவிட்டு சென்றதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அது 9 மாத குழந்தை என்று எனக்கு எப்படி தெரியும் என்றால் எனக்கு தெரியும் நானும் குழந்தைகளை எடுத்து வளர்த்திருக்கிறேன். சுகன்யாவின் குழந்தைக்கு 9 மாதம் என்று மருத்துவர் மற்றும் பெற்றோர்களை தவிர மற்றவர்களால் சொல்ல முடியாது என்றும் நான் அந்த அடிப்படையில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பேராலயத்திற்கு உட்பட்ட எந்த கழிப்பிடத்திலும் காசு வாங்குவதே கிடையாது என்றும் நான் வேலைப்பார்த்தது கட்ட கழிப்பிடம் இல்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அது கட்டண கழிப்பிடமா இல்லையா என்று பேராலத்தில் பாதிரியாரை அழைத்து விசாரித்தால் தெரியும் என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கழிப்பிடத்தில் வேலையே செய்யவில்லை என்ற நிலையில் சுகன்யாவை அழுதுக்கொண்டிருக்கும்போது பார்த்ததாக சொல்வதும் குழந்தையை எதிரிகளிடம் கொடுத்தபோது பார்த்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. என்னை போலவே துப்புறவு பணியாளர்கள் சுழற்சி முறையில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று வேலை செய்துகொண்டிருப்பார்கள் என்றால் சரியல்ல. சுகன்யா குழந்தையை காணவில்லை பார்தீர்களா என்று கேட்டபோது மதியம் சுமார் 1 1/2 மணியிருக்கும். அந்த விபரத்தை போலிசாரிடம் சொல்லவில்லை.

உண்மையிலேயே சம்பவம் நான் சொல்வதுபோல் நடந்திருந்தால் சுகன்யா என்னிடம் குழந்தையை பற்றி கேட்டபோது 1 1/2 மணியிருக்கும் என்று குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் சம்பவம் பொய் என்பதால் தான் சொல்ல வில்லை என்றால் சரியல்ல. நான் வேலைப்பார்த்ததாக சொல்லும் இடத்தில் காசு வாங்குபவர் யாரும்



இல்லை என்றும் அவ்வாறு ஒருவர் இருந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அது கட்டண கழிப்பிடம் இல்லை என்பதால் காசு வாங்கும் நபர் இருக்கமாட்டார் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்திற்கு வழக்கு சம்மந்தமாக அழைத்து போனபோது அங்கு வைத்துதான் போலிசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அங்கு வைத்து நான் கையெழுத்து எதுவும் வாக்குமூலத்தில் போடவில்லை. போலிசார் 2 முறை விசாரித்தார்கள் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். நான் காவல் நிலையத்திற்கு போனபோது எதிரிகள் இருவரும் இருந்தார்கள். நான்தான் போலிசார் எதிரிகளை காட்டியபோது அடையாளம் காட்டினேன். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் போலிசார்தான் எதிரிகளை எனக்கு அடையாளம் காட்டி எதிரிகளை பற்றி சாட்சியம் அளிக்க சொல்லி சொன்னார்கள் என்றால் சரியல்ல. போலிசார் நீதிமன்றத்திற்கு வந்தபோதும் வழக்கு பற்றி எதுவும் சொல்லிக்கொடுக்கவில்லை. நீதிமன்றத்திற்கு வெளியே போலிசார் சொல்லிக்கொடுத்ததன்போில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

# DEPOSITION OF WITNESS

## Chapter XXIII Code of Criminal Procedure

## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE NAGAPATTINAM.

**C.C.1/2018** P.W.5

Deposition of witness for Prosecution:

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு. ரபேல் | Father's Name. | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 17.09.2021 | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 0 17.09.2021.

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் தற்சமயம் திருவாரூர் மாவட்டம் காரையூரில் குடியிருந்துவருகிறேன். தற்போது வீட்டில் ஓய்வில் இருந்துவருகிறேன். சம்பவம் நடந்த சமயத்தில் வேளாங்கண்ணி கோவிலில் வேலைப்பார்த்துவந்தேன். வேளாங்கண்ணி கோவில் குளியல் அறை மற்றும் பாத்ரூமில் காசு வசூல் செய்யும் வேலைப்பார்த்து வந்தேன். சுகன்யாவை தெரியும். எதிரிகளை தெரியும். 3.2.2016 அன்று மதியம் 1 மணியளவில் நான் காசு வசூல் செய்துகொண்டிருந்தபோது சுமார் 24, 25 வயது மதிக்கதக்க ஒரு பெண் வந்தார் எனக்கு எதிர்தார்போல் ஆஜர் எதியும் இன்னொருவரும் உட்கார்ந்திருந்தார்கள் அந்த பெண் இருவரிடமும் அவருடைய குழந்தையை கொடுத்துவிட்டு பாத்ரூம போய்விட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு பாத்ரூமிற்கு வந்தார் அந்த குழந்தைக்கு 9 வயது இருக்கும் என்று சொல்லிவிட்டு சாட்சி சிறிய குழந்தை என்று கைகளால் குழந்தையின் அளவை சைகை செய்து காட்டினார். சமார் 15 நிமிடம் கழித்து அவர் வெளியே வந்து பார்த்போது உட்காரந்திருந்த எதிரிகள் இருவரையும் காணவில்லை அப்போது சுகன்யா என்ற பெண் அழுதுக்கொண்டுவந்தார் நான் என்ன என்று கேட்டபோது குழந்தையை இங்கே உட்கார்ந்திருந்தவர்கிளடம் கொடுத்துவிட்டு பாத்ரூம் போனேன் திரும்ப வந்து பார்த்தபோது குழந்தையையும் அவர்களையும் காணவில்லை என்று சொல்லி அழுதார். நான் தெரியாதவர்களிடம் ஏண் குழந்தையை கொடுத்தீர்கள் என்று

கேட்டதற்கு சுகன்யா ஏற்கனவே ஜவுளி கடையில் வேலைபபார்த்ததாகவும் அப்போது எதிரிகள் தெரிந்தவர்கள் என்றும் அதனால் கொடுத்துவிட்டு வந்ததாகவும் சொன்னார் நான் உள்ளே இருந்த சந்திராவை கூப்பிட்டு அக்கம் பக்கத்தில் குழந்தையை தேடிப்பார்த்தோம் 1/2 மணி நேரம் வரை தேடினோம் குழந்தை கிடைக்கவில்லை நான் சாப்பிட போய்விட்டேன் சந்திரா அவர் வேலையை பார்க்க போய்விட்டார். சிபிசிஐடி போலிசார் என்னை விசாரித்தார்கள் அப்போது குழந்தையை தூக்கி சென்றவர்களை பற்றி தெரிவில்லை அவரைகளை பார்த்தால் அடையாளம் சொல்வேன் என்று சொன்னேன். 2017ம் வருடம் 2வது முறையாக குழந்தை கிடைத்துவிட்டதாகவும் எதிரிகளை அடையாளம் காட்டவேண்டும்மென்றும் என்னையும் சந்திராவையும் சிபிசிஐடி காவல் நிலையத்திற்கு வரசொன்னார்கள் நாங்கள் போனோம் அப்போது எதிரிகளை காட்டி நாங்கள் பார்த்த நபர்கள் இவர்கள்தானா என்று கேட்டார்கள் நான் எதிரிகளை பார்த்து அடையாளம் காட்டினேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

நான் 2012ல் இருந்து கோவிலில் வேலைப்பார்த்தேன். நிரந்தர பணியாளர் இல்லை. கோவில் பணியாளர் என்பதற்கான அடையாள அட்டை இல்லை. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் கோவில் பணியாளராக இருந்தால் அடையாள அட்டை இருக்கும் என்று சொன்னால் சரியல்ல. நான் வேலைப்பார்த்ததாக சொல்லும் இடத்தில் கட்டண கழிப்பிடமே இல்லை என்றும் நான் கட்டணம் வசூல் செய்யததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு அசா.1ஐ தெரியாது. எதிரிகளை எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எதிரிகளை தெரியும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சுகன்யாவிற்கு 24, 25 வயது இருக்கும் என்று எப்படி சொல்கிறேன் என்றால் ஒரு நிதானத்தின் அடிப்படையில் பார்வையில் சொல்கிறேன். மருத்துவரை தவிர வயதின் தன்மையை வேறுயாராலும் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் நிதானத்தின் அடிப்படையில் சொல்லலாம். எதிரிகள் தெற்கு திசையில் உட்கார்ந்திருந்தார்கள் பாத்ரூம் கிழக்கு மேற்காக இருந்தது. எதிரிகள் எந்த திசையில் உட்கார்ந்திருந்தார்கள் என்று போலிசார் கேட்கவில்லை அதனால் சொல்லவில்லை. நான் வேலை செய்யும் இடத்தில் கிழக்கு மேற்காக பாத்ரூமோ

கழிப்பறையோ இல்லை என்றும் தெற்கு திசையில்தான் இருக்கிறது என்றால் சரியல்ல. கோவிலுக்கு உட்பட்ட கட்டண கழிப்பிடம் எதுவும் கிடையாது என்றும் அதில் நான் வேலைப்பார்த்தாக சொல்வது தவறு என்றும் சம்பவ தினத்தன்று பணியில் இருந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சுகன்யா என்று அந்த பெண்ணின் பெயரை நான் எப்படி தெரிந்து கொண்டேன் என்றால் அந்த பெண் அழுதுக்கொண்டிருந்தபோது நான் கேட்டதற்கு அந்த பெண் சொன்னபிறகுதான் அவரைபற்றி பெயர் விபரம் தெரிந்து கொண்டேன். அவரை கேட்டபோதுதான் குழந்தையை கொடுத்ததையும் தூக்கி கொண்டுபோனதையும் தெரிந்து கொண்டேன். இந்த விபரத்தையும் நான் போலிசிடம் சொல்லவில்லை. எதிரிகளை சுகன்யாவிற்கு எப்படி தெரியும் என்று என்னிடம் சுகன்யா சொன்ன விபரத்தை போலிசாரிடம் சொல்லியிருக்கிறேன். சுகன்யா என்னிடம் எதிரிகளுடனான பழக்கத்தை பொருத்து எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதனால் நானும் போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் வசூல் செய்த இடத்தில் இருந்து பக்கத்தில் உள்ள இடத்தில்தான் தேடிப்பார்த்தேன். அந்த விபரத்தை போலிசாரிடம் சொன்னேன். நான் பக்கத்தில் தேடிப்பார்த்த விபரத்தை போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சம்மந்தமாக சிபிசிஐடி காவல் நிலையத்திற்கு குழந்தை கிடைத்தபிறகு போனேன். வழக்கு சம்மமந்தமாக போலிசார் விசாரித்தார்கள். வாக்குமூலத்தில் கையெழுத்து எதுவும் போடவில்லை. குழந்தை கிடைத்தபிறகு போலிசார் என்னை 1 தடவைதான் விசாரித்தார்கள். மொத்தமாக 2 தடவை விசாரித்தார்கள். காவல் நிலையத்தில் போலிசார் எதிரிகளை அடையாளம் காட்டினார்கள் என்றால் இவர்கள்தானா என்று போலிசார் காட்டி கேட்டார்கள் நான் ஆமாம் என்று சொன்னேன். நான் போலிசார் எதிரிகளைஅடையாளம் காட்டியதாக ஒப்புக்கொண்டு தற்போது நான் போலிசாரிடம் அடையாளம் காட்டியதாக மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்றைய தேதியில் விசாரித்தார்கள் சிபிசிஐடி போலிசில் யார் என்னிடம் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்று எனக்கு குறிப்பிட்டு தெரியவில்லை. சம்பவம் நடந்ததாக நான் கூறிய விபரங்கள் அனைத்தும் போலிசார் எனக்கு சொல்லிக்கொடுத்து அதன் அடிப்படையில் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால்தான் யார் விசாரித்தார்கள் என்றைக்கு விசாரித்தாரர்கள் என்று

என்னால் சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. **மறுவிசாரணை இல்லை.**

# DEPOSITION OF WITNESS

## Chapter XXIII Code of Criminal Procedure

## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE NAGAPATTINAM.

**C.C.1/2018** P.W. 6

Deposition of witness for Prosecution:

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு. அலெக்ஸ்சாண்டர் | Father's Name . | |
| Village | : | Taluk : | |
| Caste | : | Calling : | |
| Religion | : | Age : | |
| Date | : 17.09.2021 | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 0 17.09.2021.

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் காரைக்கால் வடமட்டம் என்ற ஊரில் வசித்துவருகிறேன். நான் வேளாங்கண்ணி கோவிலில் கழிப்பறை பணிகள் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். 2016 பிப்ரவரி மாதம் 19 பேர் என் மேற்பார்வையின் கீழ் வேலைப்பார்த்துவந்தார்கள். அன்றைய தினம் சந்திரா கழிப்பறை துப்பறவு பணியாளராகவும், ரபேல் கட்டண வசூலிப்பராகவும் பழைய மாதாகோவில் கழிப்பறையில் வேலைப்பார்த்துவந்தார்கள். எதிரிகளை எனக்குத் தெரியாது. 2016 பிபரவரி மாதாத்தில் நான் ரவுண்ட்ஸ் போகும்போது மதியம் சுமார் 1 1/2 மணியிருக்கும் சந்திரா என்னிடம் இங்கு ஒரு குழந்தையை காணவில்லை தேடிக்கொண்டிருப்பதாக சொன்னார். யார் என்ன என்று விசாரித்தபோது ஒரு அம்மா அங்கு உட்கார்ந்திருந்த 2 போ்டம் குழந்தையைகொடுத்துவிட்டு பாத்ரூம் போனதாகவும் திரும்பி வந்து பார்த்தபோது குழந்தையை காணவில்லை என்று சொன்னார். அந்த அம்மா பெயர் என்ன என்று கேட்டதற்கு சுகன்யா என்று சொன்னார். பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர்கள் மாதாகோவில் அருகில் பேன்ஸிஸ்டோரில் பேலைப்பார்த்த வகையில் பழக்கமானவர்கள் என்பதால் குழந்தையைகொடுத்துவிட்டு போனதாக சொன்னதாக சொன்னார்கள். என்னை சிபிசிஐடி போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்தபோது நான் சூப்பர்வைசர் என்றுதான் சொல்லியிருக்கிறேன். கட்டண கழிப்பிடம் என்றால் வசூல் செய்யும் தொகைக்கு ரசீது கொடுக்க வேண்டுமென்றால் சரிதான் ஆனால் அங்கு ரசீது கொடுக்கும் பழக்கமில்லை. நான் உண்மையிலேயே சூப்பர்வைசராக இருந்தால் ரசீது வசூல் போன்ற விபரங்களை போலிசாரிடம் சொல்லியிருப்பேன் என்றும் நான் வேலை செய்யாததால் தான் போலிசாரிடம் சொல்லிவில்லை என்றால் சரியல்ல. நான் சூப்பர்வைசரே இல்லை என்பதால் என்னிடம் சந்திரா வேலை செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனக்கு சூப்பர்வைசர் என்பதற்கு அடையாள அட்டை இருக்கிறது. போலிசார் அடையாள அட்டையை என்னிடம் கேட்கவில்லை அதனால் நான் கொடுக்கவில்லை. நான் உண்மையிலேயே சூப்பர்வைசராக இருந்திருந்தால் போலிசாரிடம் அடையாள அட்டையை காட்டியிருப்பேன் என்றும் நான் சூப்பர்வைசராக இல்லாததான் அடையாள அட்டையை காட்டவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் சந்திரா என்று ஒருவர் வேலையே செய்யவில்லை என்றும் நான் அவரை சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று சந்திக்கவே இல்லை என்றும் வழக்கு சம்மந்தமாக என்னிடம் அவர் விபரங்கள் சொன்னதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சிபிசிஐடி போலிசார் 2017 ல் என்னை காவல் நிலையத்திற்கு வரசொல்லி என்னை விசாரித்தார்கள். கையெழுத்து போட்டேனா என்று ஞாபகம் இல்லை. பிப்ரவரி மாதம் 2017 ல் விசாரித்தார்கள் மாலை நேரத்தில் விசாரித்தார்கள் யார் விசாரித்தார்கள் என்று குறிப்பிட்டு தெரியாது. போலிசார் சொல்லிக்கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**